# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்,
சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)
*******

**மனு எண். 771/ந/2019 நாள் : 31/07/2019**

**திரு M.R. மருதுபாண்டியன்,**
**பரமக்குடி.** – **மனுதாரர்**

**நகராட்சி ஆணையர்,**
**காரைக்குடி நகராட்சி,**
**காரைக்குடி** – **எதிர் மனுதாரர்**

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி, T. நல்லூர், மூவேந்தர் நகர், 3/195–கதவு எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திரு M.R. மருதுபாண்டியன் அவர்களின் 29.06.2019 நாளிட்ட மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி T. நல்லூர், மூவேந்தர் நகர், 3/195–கதவு எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திரு M.R. மருதுபாண்டியன் என்பவர், தான் காரைக்குடி நகராட்சியில் நகரமைப்பு ஆய்வாளராகப் பணியாற்றியபோது தன் மீதான காரைக்குடி நகராட்சி ஆணையரின் குற்றச்சாட்டு குறிப்பாணைக்கு 14.02.2019 நாளிட்ட கடிதத்தில் உரிய விளக்கம் அளித்துள்ளதாகவும், அவ்விளக்கத்தினை ஏற்று உரிய ஆணை பிறப்பிக்கக் கோரி இம்முறைமன்ற நடுவத்தில் மனுச் செய்துள்ளார். தான் 31.07.2020 அன்று பணி ஓய்வு பெற உள்ளதையும் குறிப்பிட்டுள்ளார். மனுதாரரின் கோரிக்கை குறித்து காரைக்குடி நகராட்சி ஆணையரின் அறிக்கை பெறப்பட்டது. காரைக்குடி நகராட்சியில் வார்டு மறுவரையறைப் பணியில் அசிரத்தையாக நடந்து கொண்டு நகராட்சிக்கு அவப்பெயர் ஏற்படும் வண்ணம் நடந்து கொண்டதால் மனுதாரர் மீது குற்றச்சாட்டு குறிப்பாணைப் பிறப்பிக்கப்பட்டு அன்னாரை விசாரணை செய்ய விசாரணை அலுவலர் நியமிக்கப்பட்டு நடவடிக்கையில் உள்ளதென்றும், விசாரணையின் முடிவின்படி தனியர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு குறிப்பாணை மீது இறுதி ஆணை பிறப்பிக்கப்படும் என நகராட்சி ஆணையர் தனது 16.07.2019 நாளிட்ட கடித எண்.2030/சி1/13–இல் தெரிவித்துள்ளார்.

2. இந்நேர்வின் மனுதாரர் 31.07.2020 அன்று வயது முதிர்வின் காரணமாக பணி ஓய்வு பெறவுள்ள நிலையில் அவரது மீதான ஒழுங்கு நடவடிக்கையினை உரிய விதிகளின்படி விரைந்து முடிக்க பரிந்துரைத்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2019 –ஆம் ஆண்டு, ஜூலைத் திங்கள், 31–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிட்டு, அலுவலக முத்திரையிட்டு ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

1. திரு M.R. மருதுபாண்டியன்,
 3/195, மூவேந்தர் நகர்,
 T. நல்லூர் அஞ்சல்,
 பரமக்குடி,
 இராமநாதபுரம் மாவட்டம்.

2. நகராட்சி ஆணையர்,
 காரைக்குடி நகராட்சி,
 காரைக்குடி

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
 பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
 பேரூராட்சி பிரிவு – 3
 இ.கோ. / உதிரி